# ஜோன் லொக்கின் மெய்யியல் சிந்தனையில் உடன் பிறந்த எண்ண நிராகரி
## - ஒரு விமர்சன ஆய்வு

சோ.ஜெகநாதன்

*சமூக விஞ்ஞானத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்*

விஞ்ஞானிகள், உளவியலாளர்கள், கல்வியியலாளர்கள், ஒழுக்கவியலாளர்கள் அறிவு தொடர்பா ஆராய்ச்சியை அன்று தொடக்கம் இன்றுவரை செய்து கொண்டே வருகின்றமையும், அது தொடர்பா அவர்களிடையே காணப்படும் ஒருமித்த கருத்தின்மையால் இந்த ஆராய்ச்சி முற்றுப் பெறாத முயற்சியா இருப்பதும் அறிவு பற்றிய ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தையும் தேவையையும் எடுத்துக்காட்டுகிறது அந்த வகையில் மெய்யியல் வரலாற்றில் நவீன காலத்தில் ஏற்புடைய அறிவு தொடர்பான தேடலில் அறிவு முதல் வாதம் அல்லது காரண முதல் வாதம், அனுபவ வாதம் என்ற இருவேறு சிந்தனாகூலங்கள் தோற்றம் பெற்றன. அறிவினது மூலம் பகுத்தறிவு என்பதை அறிவு முதல் வாதம் வலியுறுத்த அதற்கு மாறான வகையில் அனுபவத்தை அனுபவ வாதம் வலியுறுத்தியது. அனுபவ முதல் வாத சிந்தனையின் முதன்மைச் சிந்தனையாளராக விளங்கும் ஜோன் லொக் ஆரம்பத்தில் டேக்காட்டின் தத்துவம் சார்ந்த நூல்களை வாசித்தார். உடன் பிறந்த எண்ணங்கள் என்ற டேக்காட்டின் தத்துவத்துடன் உடன்படாத லொக் அதனை தர்க்க ரீதியாக மறுத்ததுடன், அறிவின் மூலம், அதன் எல்லை, ஏற்புடைமை, வகை பற்றிய அறிவாராய்ச்சியியல் ரீதியான விளக்கமொன்றை 'மனித விளக்கங்களை உள்ளடக்கிய கட்டுரை' என்ற நூலில் தெளிவுபடுத்தும் போது ஆங்காங்கு தனது வரையறையை மீறி ஏனைய மெய்யியல் சிந்தனையின் தழுவல்களை உள்வாங்கியமையால் பின்வந்த மெய்யியலாளர்களால் லொக்கின் அனுபவ வாதம் பல விமர்சனங்களுக்கு உட்படுத்தப்பட்டது. அனுபவ வாத மெய்யியலின் அடிப்படை அம்சங்களையும் அதன் மீதான விமர்சனங்களை விளக்குவதனூடாக லொக்கின் அறிவாராய்ச்சியியல் கொள்கை ஒரு நடுவு நிலைமையானது என்பதை வெளிப்படுத்துவதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.